தேர்ச்சி –1.0
தேர்ச்சி மட்டம் –1.2

செயற்பாடு – 1.2.1
பாடவேளை – 2 (80 நிமிடங்கள்)

2021, january, 3rd week (2021.01.23)

# சுற்றாடல் சார்ந்த கருப் பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைத்தல்

1. "வருடப் பிறப்பு" எனும் தலைப்பில் ஓவியமொன்றை நிர்மாணிப்போம

**கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

- தொனிப் பொருளுக்குப் பொருத்தமான மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளில் பல வித மனித உடல் நிலைகளும் அதற்குரிய சூழலும்.
- உரிய ஒருங்கிணைப்பு முறைகள்.
- கலைப் பாணிக்குப் பொருத்தமான வர்ண ஊடகங்களின் உபயோகமும் இரேகைகளும்.
- நுட்ப முறைகளுக்கு ஏற்ற விதத்தில் உபகரணங்களைக் கையாளும் திறமை.
- வெளிப்பாட்டுத் தன்மையும் ஆக்கபூர்வமான தன்மையும்.

**செயற்பாடு**

1. தொனிப் பொருளுக்குப் பொருந்தும் யதார்த்தமான வடிவங்களை உபயோகித்துச் சித்திரத்தின் பருமட்டான படத்தை வரைக.
2. தளத்தைச் சரியாக உபயோகித்து (தளப் பிரயோகம் - முன்னணி, இடையணி, பின்னணி என்பன கருதி ஓவியத்தை ஒருங்கிணைக்குக.
3. ஓவியத்தின் யதார்த்தமான கலைப்பாணிக்குரிய இயல்புகள் தோன்றும் விதத்தில் வர்ண ஊடகங்களை உபயோகிக்குக.
4. உரிய கோட்பாடுகளையும் நுட்ப முறைகளையும் சரியாகப் பின்பற்றுக.

தனித்துவமான நுட்பத் திறமை வெளிப்படும் விதத்தில் நிர்மாணிப்பில் ஈடுபடுக

**மேலதிக செயற்பாடுகள் :**

1.3.2. - குளம், வாய்க் கால், நீரோடை அண்மித்த சூழலைக் கொண்ட மனித விலங்கு உருவங்களைக் கொண்ட சம்பவமொன்றை ஓவியமாகத் தீட்டுவோம்

1.3.3. - சோகம், மகிழ்ச்சி, திகில் எனும் உணர்வுகள் வெளிப்படும் சந்தர்ப்பம் ஒன்றை ஓவியமாக தீட்டுவோம்.

1.3.4. - உண்ணாட்டுக் கைத்தொழிலுடன் தொடர்புடைய தொனிப் பொருளை ஓவியமாக தீட் டுவோம்.

1.3.5. - சமயச் சூழலுடன் தொடர்புடைய தொனிப்பொருளைக் கொண்டு மனங்கவர் சந்தர்ப்பம் ஒன்றை ஓவியமாகத் தீட்டுவோம்.

